இந்திய அரசாங்க

சட்டம், நீதி மற்றும் கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம்

सत्यमेव जयते

# பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989

(சட்ட எண் 33/1989)

# THE SCHEDULED CASTES AND THE SCHEDULED TRIBES (PREVENTION OF ATROCITIES) ACT, 1989

(Act No. 33 of 1989)

தமிழாக்கம் :

இந்திய அரசாங்கத்திற்காக

சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை

சென்னை—9

தமிழ்நாடு அரசாங்க எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
2003.

# பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989

(சட்ட எண் 33/1989)

# The Scheduled Castes and The Scheduled Tribes (Prevention of Atrocities) Act, 1989

(Act No. 33 of 1989)

*339-13—1

## முன்னுரை

*1989, செப்டம்பர் 11 ஆம் தேதியிலிருந்தவாறுள்ள பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 (சட்ட எண் 33/1989)இன் இந்தப் பதிப்பு, அச்சட்டத்தின் அதிகார உறுதிபெற்ற தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது. இது 1992 நவம்பர் 23ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு I, தொகுதி I-இல், 1 முதல் 10 வரையிலுள்ள பக்கங்களில் வெளியிடப்பட்டது.*

*இந்த அதிகார உறுதிபெற்ற வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973இன் (50/1973) பிரிவு 2இன் கூறு (அ)-வின்படி குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகார உறுதிபெற்ற வாசகம் ஆயிற்று.*

புதுதில்லி, (ஒப்பம்)............,
*23 நவம்பர், 1992.* இந்திய அரசாங்கச் செயலாளர்.

## பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989.

(சட்ட எண். 33/1989)

### பொருளடக்கம்

பிரிவுகள் : பக்கங்கள்


#### அத்தியாயம்–I

#### முன்னுரை

1. குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். .. 2

2. பொருள்வரையறைகள் .. 2

#### அத்தியாயம்-II

#### வன்கொடுமைக் குற்றச்செயல்கள்

3. வன்கொடுமைக் குற்றச்செயல்களுக்கான தண்டனைகள் ... 3

4. கடமைகளைப் புறக்கணிப்பதற்கான தண்டனை. .. 6

5. பிந்திய குற்றத்தீர்ப்புகளில் அதிகத் தண்டனை. .. 6

6. இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் குறித்த சில வகையங்கள் இந்தச் சட்டத்திற்குப் பொருந்துறுதல். .. 6

7. குறித்த சில நபர்களுடைய சொத்து பறிமுதல் செய்யப்படுதல். .. 6

8. குற்றச்செயல் பற்றியதான அனுமானங்கள் .. 6

9. அதிகாரங்களை வழங்குதல். .. 7

#### அத்தியாயம்-III

#### வரையிட வெளியேற்றம்

10. குற்றச்செயல் இழைக்கக் கூடிய நபரை அகற்றுதல். .. 7

11. அந்த வரையிடத்தை விட்டு ஒருவர் வெளியேறத் தவறும் போதும் வெளியேறிய பின்பு உள்ளே நுழையும்போதும் நெறிமுறை. .. 7

12. பிரிவு 10இன் தமக்கெதிராக ஆணை பிறப்பிக்கப்பட்ட நபரின் உடலளவுகள், ஒளிப்படங்கள் முதலியவற்றை எடுத்தல் .. 8

13. பிரிவு 10 இன் கீழ் இடும் ஆணைக்கு இணங்காமைக்குத் தண்டனை. .. 9

#### அத்தியாயம்-IV

#### தனியுறு நீதிமன்றம்

14. தனியுறு நீதிமன்றம். .. 9

15. தனியுறு அரசுக் குற்றத்துறை வழக்குரைஞர். .. 9

## அத்தியாயம்-V

## பல்வகை

பிரிவுகள்: பக்கங்கள்

16. கூட்டு அபராதம் விதிப்பதற்கு மாநில அரசாங்கத்திற்குள்ள அதிகாரம். .. 9

17. சட்டம் ஒழுங்கு இயக்கமைப்பினால் எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள். .. 9

18. இந்தச் சட்டத்தின் கீழ்வரும் குற்றச்செயல் ஒன்றை இழைக்கின்ற நபர்களுக்குத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 438 பொருந்துறுவதில்லை. .. 10

19. இந்தச் சட்டத்தின் கீழ்வரும் குற்றச்செயல் ஒன்றை இழைத்ததாகத் தீர்ப்புக்குள்ளான நபருக்குத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 360 இன் அல்லது குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் வகையங்கள் பொருந்துறுவதில்லை. .. 10

20. பிற சட்டங்களை விட இந்தச் சட்டம் மேலோங்கி நிற்கும். .. 10

21. இந்தச் சட்டத்தைத் திறம்படச் செயற்படுத்துவதை உறுதிசெய்ய அரசாங்கத்திற்குள்ள கடமை. .. 10

22. நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. .. 11

23. விதிகள் வகுப்பதற்கான அதிகாரம். .. 11

# பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989

## (சட்ட எண் 33/1989)

[*1989, செப்டம்பர் 11*]

[1]பட்டியலில் கண்ட சாதியினர், [2]பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆகியோருக்கு எதிராக, வன்கொடுமை இழைக்கும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காகவும், அத்தகைய குற்றச்செயல்களை விசாரணை செய்வதற்கெனத் தனியுறு நீதிமன்றங்களை ஏற்படுத்தி, அத்தகைய குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டோரின் துயர் துடைப்பிற்கும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் வழிவகை செய்வதற்காகவும், அவற்றுடன் இசைவுடையவை அல்லது அவற்றுக்குச் சார்வுடையவை பொறுத்தும் இயற்றப்பட்ட ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் நாற்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

---

பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் பற்றி இந்திய அரசமைப்பின் உறுப்பு *341*, உறுப்பு *342* இவற்றில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது:—

[1]*341. (1)* மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சி நிலவரை எதனைப் பொறுத்தும், அது ஒரு மாநிலமாக இருக்குமிடத்து அதன் ஆளுநரைக் கலந்தாய்வு செய்த பின்பு, அந்த மாநிலம் அல்லது, நேர்வுக்கேற்ப, ஒன்றியத்து ஆட்சி நிலவரை தொடர்பாக, இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை பட்டியலில் கண்ட சாதிகள் என்று கொள்ளப்பட வேண்டிய சாதிகள், இனங்கள் அல்லது பழங்குடிகள் எவை என்றும், சாதிகளில், இனங்களில் அல்லது பழங்குடிகளில் உள்ள பகுதிகள் அல்லது தொகுதிகள் எவை என்றும் குடியரசுத் தலைவர் பொது அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாம். பட்டியலில் கண்ட சாதிகள்.

*(2)* நாடாளுமன்றம், சட்டத்தினால் சாதி, இனம், அல்லது பழங்குடி எதனையும் அல்லது சாதியில், இனத்தில் அல்லது பழங்குடியில் உள்ள பகுதிகள் அல்லது தொகுதிகள் எவற்றையும் *(1)* ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் கண்ட சாதிகளின் வரிசைத் தொகுப்பில் சேர்க்கலாம் அல்லது அத்தொகுப்பிலிருந்து நீக்கிவிடலாம். ஆனால், மேலே கண்டவாறின்றி மேற்சொன்ன கூறின்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிவிக்கை. பிந்திய அறிவிக்கை எதனாலும் மாறுதல் செய்யப்படுதல் ஆகாது.

[2]*342. (1)* மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சி நிலவரை எதனைப் பொறுத்தும் அது ஒரு மாநிலமாக இருக்குமிடத்து, அதன் ஆளுநரைக் கலந்தாய்வு செய்த பின்பு, அந்த மாநிலம் அல்லது நேர்வுக்கேற்ப ஒன்றியத்து ஆட்சி நிலவரை தொடர்பாக இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை பட்டியலில் கண்ட பழங்குடிகள் என்று கொள்ளப்பட வேண்டிய பழங்குடிகள், பழங்குடிச் சமூகங்கள் எவை என்றும், பழங்குடிகளில் அல்லது பழங்குடிச் சமூகங்களில் உள்ள பகுதிகள் அல்லது தொகுதிகள் எவை என்றும் குடியரசுத் தலைவர் பொது அறிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாம். பட்டியலில் கண்ட பழங்குடிகள்.

---

*1. அரசமைப்பு (பட்டியலில் கண்ட சாதியினர்) ஆணை 1950 (C.O.19), அரசமைப்பு (பட்டியலில் கண்ட சாதியினர்) (ஒன்றியத்து ஆட்சி நிலவரைகள்) ஆணை, 1951 (C.O.. 32). அரசமைப்பு (ஜம்மு—காஷ்மீர்) பட்டியலில் கண்ட சாதியினர் ஆணை, 1956 (C.O.. 52) அரசமைப்பு (தாத்ரா மற்றும் நாகர்ஹவேலி) பட்டியலில் கண்ட சாதியினர் ஆணை, 1962 (C.O.. 64) பாண்டிச்சேரி பட்டியலில் கண்ட சாதியினர் ஆணை, 1964 (C.O. 68) அரசமைப்பு (கோவா, தமன் மற்றும் டையூ) பட்டியலில் கண்ட சாதியினர் ஆணை, 1968 (C.O.. 81) அரசமைப்பு (சிக்கிம்) பட்டியலில் கண்ட சாதியினர் ஆணை, 1978 (C.O. 110) ஆகியவற்றைக் காண்க.*

*2. அரசமைப்பு (பட்டியலில் கண்ட பழங்குடியினர்) ஆணை, 1950 (C.O. 22). அரசமைப்பு (பட்டியலில் கண்ட பழங்குடியினர்) (ஒன்றியத்து ஆட்சி நிலவரைகள்) ஆணை, 1951 (C.O. 33) அரசமைப்பு (அந்தமான் மற்றும் நிக்கோபார்த் தீவுகள்) பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆணை, 1959 (C.O..58) அரசமைப்பு (தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி) பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆணை 1962 (C.O.. 65). அரசமைப்பு (பட்டியலில் கண்ட பழங்குடியினர்) (உத்திரப்பிரதேசம்) ஆணை, 1967 (C.O. 78) அரசமைப்பு (கோவா, தமன் மற்றும் டையூ) பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆணை 1968 (C.O. 82) அரசமைப்பு (நாகாலாந்து) பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆணை 1970 (C.O.. 88). அரசமைப்பு (சிக்கிம்) பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆணை, 1978 (C.O.111). ஆகியவற்றைக் காண்க.*

(2) நாடாளுமன்றம், சட்டத்தினால், பழங்குடி அல்லது பழங்குடி சமூகம் எதனையும் அல்லது அந்தப்பழங்குடி அல்லது பழங்குடிச் சமூகம் எதிலும் உள்ள பகுதிகள் அல்லது தொகுதிகள் எவற்றையும் (1)ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் கண்ட பழங்குடிகளின் வரிசைத் தொகுப்பில் சேர்க்கலாம் அல்லது அத்தொகுப்பிலிருந்து நீக்கி விடலாம். ஆனால், மேலே கண்டவாறன்றி, மேற்சொன்ன கூறின்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிவிக்கை பிந்திய அறிவிக்கை எதனாலும் மாறுதல் செய்யப்படுதல் ஆகாது.

மேற்கண்ட அரசமைப்பு உறுப்புகளின் வகையங்களின்படி கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன:—

## அத்தியாயம் I

### முன்னுரை

1. (1) இந்தச் சட்டம் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் தேதியன்று செல்லாற்றல் பெறும்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள் வரையறைகள்.

(அ) "வன்கொடுமை" என்பது, பிரிவு 3இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் என்று பொருள்படும்;

(ஆ) "தொகுப்புச் சட்டம்" என்பது, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 என்று பொருள்படும் ;

(இ) "பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர்" என்பது, அரசமைப்பின் உறுப்பு 366இன் கூறுகள் (24), (25) ஆகியவற்றின்படி முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களைக் கொண்டிருக்கும்;

(ஈ) "தனியுறு நீதிமன்றம்" என்பது, பிரிவு 14இல் தனியுறு நீதிமன்றம் எனக் குறித்துரைக்கப்பட்டுள்ள ஓர் அமர்வு நீதிமன்றம் என்று பொருள்படும்;

(உ) "தனியுறு அரசுக்குற்றத்துறை வழக்குரைஞர்" என்பது பிரிவு 15இல் தனியுறு அரசுக் குற்றத்துறை வழக்குரைஞர் எனக் குறித்துரைக்கப்பட்டுள்ள அரசுக் குற்றத்துறை வழக்குரைஞர் அல்லது அதில் சுட்டப்பட்டுள்ள ஒரு வழக்குரைஞர் என்று பொருள்படும்;

(ஊ) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, ஆனால் பொருள் வரையறை செய்யப்பட்டிறாதவையும் தொகுப்புச் சட்டத்திலோ, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்திலோ பொருள் வரையறை செய்யப்பட்டவையுமான சொற்களும் சொற்றொடர்களும், தொகுப்புச் சட்டத்தில் அல்லது, நேர்வுக்கேற்ப, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களைக் கொண்டிருக்கும். 45/1860

(2) இந்தச் சட்டத்தில் சுட்டப்படும் ஒரு சட்டம் அல்லது அதன் வகையம் எதுவும், அத்தகைய சட்டமோ, அதன் வகையம் எதுவுமோ செல்லாற்றலில் இல்லாத பகுதி எதனையும் பொறுத்தவரை, அந்தப் பகுதியில் அதற்கு நேரிணையான சட்டம் எதுவும் செல்லாற்றலில் இருப்பின், அதனைச் சுட்டுவதாகப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

## அத்தியாயம் II

## வன்கொடுமைக் குற்றச்செயல்கள்

3. (1) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ இல்லாத எவரும்— வன்கொடுமைக் குற்றச் செயல்களுக்கான தண்டனைகள்.

(i) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவரை உண்ணத்தக்கதல்லாத அல்லது அருவருப்பான பொருள் எதனையும் குடிக்குமாறு அல்லது உண்ணுமாறு வல்லந்தப்படுத்துவாராயின்,

(ii) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவருக்கு உடல் ஊறு, அவமதிப்பு அல்லது தொல்லை விளைவிக்கும் கருத்துடன், அவரது இருப்பிடத்தில் அல்லது அதன் அருகாமையில் மலம், கழிவுப் பொருள், விலங்கின் பிணச் சிதைவுகள், அருவருப்பான பிறபொருள் எதனையும் கொட்டி வைப்பாராயின்,

(iii) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவரின் உடம்பிலிருந்து உடைகளை வல்லந்தமாக அகற்றுவாராயின், அல்லது அவரை வெற்றுடம்புடனோ, சாயத்தால் அலங்கோலப்படுத்தப்பட்ட முகம் அல்லது உடம்புடனோ பிறர்காண இட்டுச் செல்வாராயின், அல்லது இவை போல்வதான மனித மாண்பினை இழிவுபடுத்தும் செயல் எதனையும் செய்வாராயின்,

(iv) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவருக்குச் சொந்தமான அல்லது அவருக்கு ஒதுக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்டதாகத் தகுதிறமுடைய அதிகார அமைப்பால் அறிவிக்கப்பட்ட நிலத்தைச் சட்ட முரணாகக் கையுடைமை கொள்வாராயின், அல்லது அதில் பயிரிடுவாராயின், அல்லது அவ்வாறு அவருக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை மாற்றம் செய்விப்பாராயின்,

(v) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவருடைய நிலத்தில் அல்லது இருப்பிடத்தில் அவருக்குள்ள உடைமையை சட்ட முரணாகப் பறிப்பாராயின், அல்லது நிலம், இருப்பிடம் அல்லது நீர்வசதி மீது அவருக்குள்ள உரிமைகளை அவர் துய்ப்பதில் குறுக்கிடுவாராயின்,

(vi) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவரை "பேகார்" முறையிலோ, பொது நோக்கங்களுக்காக அரசாங்கம் விதித்துள்ள கட்டாயப் பணியல்லாத, வல்லந்தமாக வேலைசுமத்தும் அல்லது கொத்தடிமை வேலைக்கு ஆட்படுத்தும் இவை போல்வதான பிற முறைகளிலோ செயலுறக் கட்டாயப்படுத்துவாராயின், அல்லது ஆசைக்காட்டிக் கவர்ந்திழுப்பாராயின்,

(vii) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவரை, குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களிக்காதிருக்குமாறோ, வாக்களிக்குமாறோ, அல்லது சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு அல்லாமல் பிற முறையில் வாக்களிக்குமாறோ வல்லந்தப்படுத்துவாராயின் அல்லது மிரட்டுவாராயின்,

(viii) பட்டியல் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவருக்கு எதிராக, பொய்யான தீய நோக்குடையதாக அல்லது அலைக்கழிப்புக்குள்ளாக்குவதாக உள்ள உரிமையியல் அல்லது குற்றவியல் அல்லது பிற சட்டமும் நடவடிக்கைகளைத் தொடுப்பாராயின்,

(ix) பொது ஊழியர் எவரிடமும், பொய்யான அல்லது அற்பமான தகவல் எதனையும் கொடுத்துப் பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவருக்கு ஊறு அல்லது தொல்லை கொடுக்கும் வகையில், அந்தப் பொது ஊழியர் சட்ட முறையான அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு செய்வாராயின்;

(x) பட்டியலில் கண்ட சாதியினராகவோ பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவரை, பொதுமக்கள் பார்வையில் உள்ள இடம் எதிலும் தாழ்வுபடுத்தும் கருத்துடன் வேண்டுமென்றே அவமானப்படுத்துவாராயின் அல்லது அச்சுறுத்துவாராயின்;

(xi) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ, உள்ள பெண் ஒருவருக்கு மானக்கேடு அல்லது நாணக்குலைவு ஏற்படுத்தும் கருத்துடன் அவரைத் தாக்க முனைவாராயின் அல்லது தாக்குவாராயின்;

(xii) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள பெண் ஒருவரின் உள்ளத்தில் ஆதிக்கம் பெற்றிருந்து, அதனால் மட்டுமே உட்பட்டு, அப்பெண்ணைத் தம் பாலுணர்வுச் செயல்களுக்கு அவர் பயன்படுத்துவாராயின்;

(xiii) பட்டியலில் கண்ட சாதியினராகவோ பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ளவர்கள் வழக்கமாகப் பயன்படுத்தும் நீரூற்று, நீர்த்தேக்கம் அல்லது வேறு எந்த நீர் ஆதாரங்களின் நீரை, அதனை வழக்கமாகப் பயன்படுத்தும் நோக்கத்திற்கு ஏற்றதல்லாத வகையில் கெடுப்பாராயின் அல்லது மாசுப்படுத்துவாராயின்;

(xiv) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ, உள்ள ஒருவர், பொதுமக்கள் கூடுகிற இடத்திற்குச் செல்லும் பாதையைப் பயன்படுத்துவதற்கான வழக்காற்று உரிமையை மறுப்பாராயின், அல்லது பிற பொதுமக்களோ, அவர்களில் ஒரு பிரிவினரோ உரிமையுடன் பயன்படுத்தும் அல்லது சென்றுவரும் பொதுமக்கள் கூடும் இடத்தினை அவர் பயன்படுத்துவதையோ அந்த இடத்திற்குச் சென்றுவருவதையோ தடைசெய்யும் வகையில் அவரைத் தடுத்து நிறுத்திவைப்பாராயின்;

(xv) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவரை, அவருடைய வீட்டையோ, ஊரையோ, அவர் குடியிருக்கும் பிற இடத்தையோ விட்டு அகலுமாறு வல்லந்தப்படுத்துவாராயின் அல்லது அவ்வாறு விட்டுச் செல்லுமாறு செய்விப்பாராயின்;

அவர், ஆறுமாதத்திற்குக் குறையாததாய், ஐந்தாண்டு வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனையும், அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

(2) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ இல்லாத எவரும்—

(i) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள எவரையும் நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள சட்டத்தின்படி மரண தண்டனைக்குரிய குற்றச் செயலுக்காகக் குற்றத் தீர்ப்புக்குள்ளாக்கும் கருத்துடனோ, அவர் அத்தகைய குற்றத் தீர்ப்புக்கு உள்ளாகக்கூடும் எனத் தெரிந்தோ, பொய்ச்சான்று அளிப்பாராயின் அல்லது பொய்ச்சான்று புனைவாராயின், அவர் ஆயுள் தண்டனையும், அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்; பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவர், குற்றமற்றவராயிருந்து, அத்தகைய பொய்ச்சான்றோ, புனைச்சான்றோ அளிக்கப்பட்டதன் விளைவாகக் குற்றத் தீர்ப்புக்கு ஆளாக்கப்பட்டு, தூக்கிலிடப்படுவாராயின், அவ்வாறு பொய்ச்சான்று அளிக்கிற அல்லது புனைகிற நபர் மரண தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்;

(ii) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள எவரையும், மரண தண்டனையல்லாத, ஆனால், ஓராண்டிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவதற்குற்ற குற்றச் செயல் ஒன்றை இழைத்ததாகக் குற்றத்தீர்ப்புக்கு உள்ளாக்கும் கருத்துடனோ, அவர் அத்தகைய குற்றத்தீர்ப்புக்கு உள்ளாகக்கூடும் எனத் தெரிந்தோ பொய்ச்சான்று அளிப்பாராயின் அல்லது புனைவாராயின், அவர் ஆறுமாதத்திற்குக் குறையாததாய், ஏழாண்டுவரை அல்லது அதற்கு மேற்பட்டு நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்;

(iii) பட்டியலில் கண்ட சாதியினராகவோ பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவருக்குச் சொந்தமான சொத்து எதற்கும், தீயினால் அல்லது வெடிபொருள் எதனாலும் சேதம் விளைவிக்கும் கருத்துடனோ, அவ்வாறு சேதம் விளைவிக்கக் கூடும் எனத் தெரிந்தோ, சொத்தழிப்புச் செய்வாராயின், அவர், ஆறு மாதத்திற்குக் குறையாததாய் ஓராண்டு வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்;

(iv) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவரால் வழிபாட்டிடமாகவோ, வாழுமிடமாகவோ சொத்தினைக் கையடைவில் வைப்பதற்கான இடமாகவோ வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிற கட்டடம் எதற்கும், தீயினால் அல்லது வெடிபொருள் எதனாலும் அழிவு ஏற்படுத்தும் கருத்துடன் அல்லது அழிவு ஏற்படக்கூடும் எனத்தெரிந்தே சொத்தழிப்புச் செய்வாராயின், அவர், ஆயுள் தண்டனையும், அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்;

(v) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ள ஒருவருக்கு அல்லது அவருடைய சொத்திற்கு, அவர் இன்னார் என்னும், அந்தச் சொத்து இன்னாருடைய சொத்து என்னும் காரணத்தைக் கொண்டே இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின்படி பத்தாண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதனையும் இழைப்பாராயின், அவர், ஆயுள் தண்டனையும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்; 45/1860

(vi) இந்த அத்தியாயத்தின்படி வரும் குற்றச்செயல் ஒன்று இழைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்தோ, அவ்வாறு இழைக்கப்பட்டுள்ளது என நம்புவதற்குக் காரணம் கொண்டிருக்கும் நிலையிலோ, சட்டப்படியான தண்டனையிலிருந்து குற்றவாளியைக் காப்பதற்கான கருத்துடன், அந்தக் குற்றச்செயல் இழைக்கப்பட்டதற்கான சான்றை மறைவுறச் செய்வாராயின், அல்லது அத்தகைய கருத்துடன், அந்தக் குற்றச்செயல் பொறுத்த தகவல் பொய்யானது என்பதைத் தெரிந்தோ, பொய்யானது என்பதை நம்பியோ அத்தகவலைக் கொடுப்பாராயின், அவர் அந்தக் குற்றச் செயலுக்கான தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்;

(vii) பொது ஊழியராயிருந்துக் கொண்டு இந்தப் பிரிவின்படி வரும் குற்றச் செயல் ஒன்றை இழைப்பாராயின், அவர் ஓராண்டிற்குக் குறையாததாய், அந்தக் குற்றச்செயலுக்கான தண்டனையின் அளவிற்கு நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்.

4. பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ இல்லாத பொது ஊழியர் ஒருவர், இந்தச் சட்டத்தின்படி அவர் புரிய வேண்டிய கடமைகளை வேண்டுமென்றே புறக்கணிப்பாராயின், அவர் ஆறு மாதத்திற்குக் குறையாததாய், ஓராண்டு வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார். கடமைகளைப் புறக்கணிப்பதற்காக தண்டனை.

5. இந்த அத்தியாயத்தின்படி வரும் குற்றச் செயலுக்கென முன்னரே குற்றத்தீர்ப்புப் பெற்ற எவரும், இரண்டாம் குற்றச் செயலுக்காக அல்லது அதற்குப் பின்னர் இழைக்கப்படும் குற்றச் செயல் எதற்காகவும் குற்றத் தீர்ப்பு அளிக்கப்படுவாராயின், அவர் ஓராண்டிற்குக் குறையாததாய், அந்தக் குற்றச்செயலுக்கான தண்டனையின் அளவிற்கு நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார். பிந்திய குற்றத் தீர்ப்புகளில் அதிகத் தண்டனை.

6. இந்தச் சட்டத்தின் பிறவகையங்களுக்கு உட்பட்டு, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 34, அத்தியாயம் III, அத்தியாயம் IV, அத்தியாயம் V, அத்தியாயம் V அ பிரிவு 149, அத்தியாயம் XXIII ஆகியவற்றின் வகையங்கள், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்திற்குப் பொருந்துறுவது போன்றே இயலுமளவு இந்தச் சட்டத்திற்கும் பொருந்துறுவன ஆகும். இந்தியத் தண்டத் தொகுப்புக் குறித்த சில வகையங்கள் இந்தச் சட்டத்திற்கு பொருந்துறுதல் 45/1860

7. (1) இந்த அத்தியாயத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒன்றை இழைத்திருப்பதாக நபர் ஒருவருக்குக் குற்றத் தீர்ப்பு வழங்கப்பெற்றிருக்குமிடத்து, தனியுறு நீதிமன்றம், தண்டனை விதிப்பதுடன்கூட, அவருக்குச் சொந்தமானதும், அந்தக் குற்றச்செயலை இழைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டதுமான சொத்து எதுவும் அது அசையும் சொத்தாகவோ அசையாச் சொத்தாகவோ, இரண்டு வகைச் சொத்தாகவோ இருப்பினும் அது அரசாங்கத்திற்குப் பறிமுதல் செய்யப்படுவதாகும் என்று எழுத்தாணை வாயிலாக விளம்பலாம். குறித்த சில நபர்களுடைய சொத்து பறிமுதல் செய்யப் படுதல்.

(2) இந்த அத்தியாயத்தின்படி வரும் குற்றச்செயல் ஒன்றை இழைத்திருப்பதாக ஒருவர் மீது குற்றஞ்சாட்டப் பெற்றிருக்குமிடத்து அவரை விசாரணை செய்யும் தனியுறு நீதிமன்றம் அவருக்குச் சொந்தமான அனைத்துச் சொத்துகளையும் அல்லது அவற்றில் எதனையும் அவை அசையும் சொத்தாகவோ அசையாச் சொத்தாகவோ, இரண்டு வகைச் சொத்தாகவோ இருப்பினும், அத்தகைய விசாரணையின்போது அவை பற்றுகை செய்யப்படுதல் வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கலாம்; அத்தகைய விசாரணை குற்றத் தீர்ப்பில் முடிவுறுமிடத்து அவ்வாறு பற்றுகை செய்யப்பட்ட சொத்து, இந்த அத்தியாயத்தின்படி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட வேண்டிய அபராதத்தொகையின் அளவிற்குப் பறிமுதல் செய்யப்படுவதற்கு உள்ளாகும்.

8. இந்த அத்தியாயத்தின்படி வரும் குற்றச்செயல் ஒன்றைப் பொறுத்துத் தொடரப்படும் வழக்கில்,— குற்றச்செயல் பற்றியதான அனுமானங்கள்.

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவர், இந்த அத்தியாயத்தின்படி வரும் குற்றச் செயல் ஒன்றைப் பொறுத்துக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது அக்குற்றச்செயலை இழைத்ததாகத் தகுமான ஐயப்பாட்டிற்கு உள்ளான ஒருவருக்குப் பண உதவி அளித்திருந்தார் என மெய்ப்பிக்கப்படுமிடத்து, மாறாக மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, அவர் அக்குற்றச் செயலை இழைக்க உடந்தையாக இருந்தார் எனத் தனியுறு நீதிமன்றம் அனுமானம் கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) இந்த அத்தியாயத்தின்படி வரும் குற்றச்செயல் ஒன்றை ஒரு குழுவின் இழைத்தனர் என்பது மெய்ப்பிக்கப்படுமிடத்தும், மேலும், இழைக்கப்பட்ட அக்குற்றச்செயல், நிலம் அல்லது பிற பொருட்பாடு எதனையும் பொறுத்து ஏற்பட்ட பூசலின் பின்விளைவாக நடந்தது என்பது மெய்ப்பிக்கப்படுமிடத்தும், பொதுக் கருத்தை மேற்கொண்டோ பொது நோக்கத்தை நிறைவேற்றும் வகையிலோ அந்தக் குற்றச்செயல் இழைக்கப்பட்டது என அது அனுமானம் கொள்ளுதல் வேண்டும்.

9. (1) தொகுப்புச் சட்டத்தில் அல்லது இந்தச் சட்டத்தின் பிற வகையம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மாவட்டம் எதிலும் அல்லது அதன் பகுதி ஒன்றில்— அதிகாரங்களை வழங்குதல்.

(அ) இந்தச் சட்டத்தின்படி வரும் குற்றச்செயல் இழைக்கப்படுவதைத் தடுப்பதும் அதனை எதிர்த்துச் சமாளிப்பதும், அல்லது

(ஆ) இந்தச் சட்டத்தின்படி வரும் வழக்கு எதனையும் அல்லது வழக்குகளின் வகை அல்லது தொகுப்பு எவற்றையும் நடத்துவதும்,

அவசியமானது அல்லது உகந்தது என மாநில அரசாங்கம் கருதுமாயின், அந்த மாவட்டத்தில் அல்லது, நேர்வுக்கேற்ப, அதன் பகுதி எதிலும், அத்தகைய வழக்கினை அல்லது அத்தகைய வழக்குகளின் வகை அல்லது தொகுப்பினை நடத்துவதற்காகத் தொகுப்புச் சட்டத்தின்படி ஒரு காவல் அலுவலர் செலுத்தத்தக்க அதிகாரங்களையும் குறிப்பாக நபர்களைக் கைது செய்தல், புலனாய்வு செய்தல், தனியுறு நீதிமன்றம் எதன் முன்பும் வழக்குத் தொடர்தல் ஆகியவற்றிற்கான அதிகாரங்களையும் மாநில அரசாங்கம், மாநில அரசாங்கத்தின் அலுவலர் எவருக்கும் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக வழங்கலாம்.

(2) இந்தச் சட்டத்தின் வகையங்களை அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதி, செயல்திட்டம் அல்லது ஆணை இவற்றை நிறைவேற்றுவதில், உட்பிரிவு (1) இல் காட்டப்பட்டுள்ள அலுவலருக்கு அனைத்துக் காவல் துறை அலுவலர்களும், அரசாங்கத்தின் பிற அலுவலர்களும் உதவுதல் வேண்டும்.

(3) அலுவலர் ஒருவர், உட்பிரிவு (1) இன்படி அதிகாரங்களைச் செலுத்துவதற்குத் தொகுப்புச் சட்டத்தின் வகையங்கள் இயலுமளவு பொருந்துறும்.

## அத்தியாயம் III

## வரையிட வெளியேற்றம்

10. (1) அரசமைப்பின் உறுப்பு 244இல் சுட்டபட்டுள்ள "பட்டியல் வரையிடங்களில்" அல்லது "பழங்குடியினர் வரையிடங்களில்", அல்லது "பழங்குடியினர் வரையிடங்கள்", அடங்கியுள்ள வரையிடம் எதிலும், ஒரு முறையீட்டின் மீதோ, காவல் துறை அறிக்கையின் மீதோ நபர் ஒருவர், இந்தச் சட்டத்தின் அத்தியாயம் II இன்படி வரும் குற்றச்செயல் ஒன்றை இழைக்கக்கூடும் எனத் தனியுறு நீதிமன்றம் தெளிவுறக் காணுமிடத்து, அது, எழுத்தாணை வாயிலாக, அவ்வாணையில் குறித்துரைக்கப்படும் பாதை வழியாகவும், காலத்திற்குள்ளாகவும், அந்த வரையிடத்தின் எல்லைகளை விட்டுத் தாமாகவே அவர் வெளியேறிவிட வேண்டும் என்றும், அந்த வரையிடத்திற்கு ஈராண்டுக்கு மேற்படாமல் அவ்வாணையில் குறித்துரைக்கப்படும் ஒரு கால அளவுக்கு அவர் திரும்பி வருதல் ஆகாது என்றும் பணிக்கலாம். குற்ற செயல் இழைக்கக் கூடிய நபரை அகற்றுதல்.

(2) அந்தத் தனியுறு நீதிமன்றம், உட்பிரிவு (1) இன்படி பணிக்கப்பட்ட நபருக்கு, பிறப்பிக்கப்பட்ட ஆணையுடன் பிறப்பிக்கப்பட்டதற்கான காரணத்தைத் தெரிவித்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன்படி ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், எந்த நபருக்கு எதிராக அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டதோ, அந்த நபரின், அல்லது அவர் சார்பாகப் பிறிதொரு நபரின் முறையீட்டின்மீது, தனியுறு நீதிமன்றம், காரணங்களை எழுதிப் பதிவு செய்து, அந்த ஆணையை முறித்தறவோ மாற்றமைவோ செய்யலாம்.

11. (1) வரையிடம் எதிலிருந்தும் வெளியேறுமாறு பிரிவு (1) இன்படி பணிப்புரை இடப்பட்ட நபர்,— அந்த வரையிடத்தை விட்டு ஒருவர் வெளியேற தவறும போதும் வெளியேறிய பின்பு உள்ளே நுழையும போதும் நெறி முறை.

(அ) பணித்திட்டவாறு வெறியேறத் தவறுவாராயின், அல்லது

(ஆ) அவ்வாறு வெளியேறியதன் பின்பு, அவ்வாணையில் குறித்துரைக்கப்படும் கால அளவுக்குள் உட்பிரிவு (2) இன்படி தனியுறு நீதிமன்றத்தின் எழுத்து வடிவிலான அனுமதியின்றி அந்த வரையிடத்திற்குள் நுழைவாராயின்

அந்தத் தனியுறு நீதிமன்றம், அவரைக் கைது செய்து, அந்த வரையிடத்திற்கு வெளியே அது குறித்துரைக்கும் ஓர் இடத்திற்குக் காவல் துறையினரின் காவலில் வைத்து அகற்றுமாறும் செய்விக்கலாம்.

(2) பிரிவு 10 இன்படி எந்த நபரைப் பொறுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டதோ அந்த நபர், அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் ஒரு கால அளவிற்கு, அதில் குறித்துரைக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட வகையில், எந்த வரையிடத்திலிருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டாரோ அந்த வரையிடத்திற்குள் திரும்பி வருவதற்கு அந்தத் தனியுறு நீதிமன்றம், எழுத்தாணை வாயிலாக அனுமதி அளிக்கலாம். மேலும், விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உரியவாறு இணங்கி நடப்பதாக, பிணையத்துடனோ, பிணையமின்றியோ பிணைமுறி ஒன்று எழுதித் தருமாறு அவரை வேண்டுறுத்தலாம்.

(3) தனியுறு நீதிமன்றம், அத்தகைய அனுமதி எதனையும் எந்த நேரத்திலும் முறித்தறவு செய்யலாம்.

(4) வெளியேறுமாறு பணிக்கப்பட்ட இடத்திற்கு அத்தகைய அனுமதியுடன் திரும்பி வருகின்ற நபர் எவரும், தனக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்; மேலும், திரும்பிவர அனுமதிக்கப்பட்ட தற்காலிகக் கால அளவு கழிவுற்றவுடன், அல்லது அந்த அனுமதி முறித்தறவு செய்யப்படுவதன்மீது, அந்தத் தற்காலிகக் கால அளவு கழிவுறுவதற்கு முன்னரே, அத்தகையவர் அந்த வரையிடத்திற்கு வெளியே சென்றுவிடுதல் வேண்டும்; அவர் பிரிவு 10 இன்படி குறித்துரைக்கப்பட்ட கழிவுறாக் கால அளவிற்குள் புதிதாக அனுமதி எதுவும் பெறாமல், அந்த வரையிடத்திற்குள் திரும்பி வருதல் ஆகாது.

(5) நபர் ஒருவர், தனக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளில் எதனையும் கடைப்பிடிக்கவோ, அந்த வரையிடத்தை விட்டு வெளியேறவோ தவறுவாராயின், அல்லது அவ்வாறு வெளியேறியவர், புதிய அனுமதியின்றி அந்த வரையிடத்தினுள் நுழைவாராயின் அல்லது அந்த வரையிடத்திற்குள் திரும்பிவருவாராயின், தனியுறு நீதிமன்றம், அவரைக் கைது செய்து, அந்த வரையிடத்திற்கு வெளியே அது குறித்துரைக்கும் ஓர் இடத்திற்குக் காவல் துறையினரின் காவலில் வைத்து அகற்றுமாறு செய்விக்கலாம்.

பிரிவு 10-ன்படி தமக்கெதிராக ஆணை பிறப்பிக்கப்பட்ட நபரின் உடலளவுகள் ஒளிப் படங்கள் முதலியவற்றை எடுத்தல்.

12. (1) பிரிவு 10 இன்படி தமக்கெதிராக ஆணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒவ்வொருவரும், தனியுறு நீதிமன்றம் வேண்டுறுத்தும்போது, தம் உடலளவுகளையும், ஒளிப்படங்களையும் காவல் துறை அலுவலர் எடுக்க அனுமதித்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இல் சுட்டப்பட்ட நபர் எவரும், தம் உடலளவுகளையும், ஒளிப்படங்களையும் எடுப்பதற்கு அனுமதிக்குமாறு வேண்டுறுத்தப்படும்போது, அவ்வாறு உடலளவுகளையும், ஒளிப்படங்களையும் எடுப்பதைத் தடுப்பாராயின், அல்லது அதற்கு மறுப்புத் தெரிவிப்பாராயின், அவற்றை எடுப்பதற்கான வழிமுறைகள் அனைத்தையும் பயன்படுத்துவது சட்ட முறையானது ஆகும்.

(3) உட்பிரிவு (2) இன்படி உடலளவுகளையோ ஒளிப்படங்களையோ எடுக்க அனுமதிப்பதைத் தடுத்தாலோ, அதற்கு மறுப்புத் தெரிவித்தாலோ, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 186 இன்படி ஒரு குற்றச் செயலாகக் கொள்ளப்படும்.

(4) பிரிவு 10-இன்படி இடப்பட்ட ஆணை ஒன்று முறித்தறவு செய்யப்படுமிடத்து, உட்பிரிவு (2)-இன்படி எடுக்கப்பட்ட அனைத்து உடலளவுகளும் (எதிர்நிலைப் படங்கள் உள்ளடங்கலாக) ஒளிப் படங்களும் அழிக்கப்படுதல் வேண்டும்; அல்லது தமக்கு எதிராக ஆணை பிறப்பிக்கப் பெற்ற நபரிடம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

13. பிரிவு 10 இன்படி தனியுறு நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை மீறுகின்ற நபர் எவரும், ஓராண்டுவரை நீடிக்கும் கால அளவிற்குச் சிறை தண்டனையும், அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

பிரிவு 10இன்படி இடும் ஆணைக்கு இணங்காமைக்குத் தண்டனை.

## அத்தியாயம் IV

## தனியுறு நீதிமன்றங்கள்

14. வழக்குகளை விரைவாக விசாரணை செய்யும் நோக்கத்திற்காக மாநில அரசாங்கம், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஒப்புதலுடன் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, மாவட்டம் ஒவ்வொன்றிற்கும், இந்தச் சட்டத்தின்படி வரும் குற்றச்செயல்களை விசாரணை செய்வதற்கென ஒரு தனியுறு நீதிமன்றமாக ஓர் அமர்வு நீதிமன்றத்தைக் குறித்துரைக்கும்.

தனியுறு நீதிமன்றம்.

15. தனியுறு நீதிமன்றம் ஒவ்வொன்றுக்கும், அந்நீதிமன்றத்தில் வழக்குகளை நடத்துவதற்கெனத் தனியுறு அரசுக் குற்றத் துறை வழக்குரைஞராக, மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக அரசுக் குற்றத் துறை வழக்குரைஞர் ஒருவரைக் குறித்துரைக்கும் அல்லது, ஏழாண்டுக்குக் குறையாமல் வழக்குரைஞராகத் தொழிலாற்றியிருக்கும் ஒரு வழக்குரைஞரை நியமிக்கும்.

தனியுறு அரசுக் குற்றத் துறை வழக்குரைஞர்.

## அத்தியாயம் V

## பல்வகை

16. குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 இன் பிரிவு 10அ-வின் வகையங்கள், இந்தச்சட்டத்தின்படி, கூட்டு அபராதம் விதித்து வசூல் செய்யவும், அதற்கு இணைவுடைய பிற பொருட்பாடுகள் பொறுத்தும், இயலுமளவு பொருந்துறும்.

கூட்டு அபராதம் விதிப்பதற்கு மாநில அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்.

17. (1) மாவட்டக் குற்றவியல் நடுவர் அல்லது உட்கோட்டக் குற்றவியல் நடுவர் அல்லது பிற ஆட்சித்துறைக் குற்றவியல் நடுவர் அல்லது காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் நிலைக்குக் கீழமையாத காவல் துறை அலுவலர் எவரும், தமக்குத் தகவல் கிடைத்ததன்மேல் அவசியமெனத் தோன்றும் விசாரணையைச் செய்த பின்பு, தம் அதிகார எல்லைக்குள்ளாக உள்ள இடம் எதிலும் குடியிருக்கும் அல்லது அங்கு அடிக்கடி வந்து செல்லும் பட்டியலில் கண்ட சாதியினராகவோ பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ இல்லாத ஒருவர் அல்லது ஒரு குழுவினர், இந்தச் சட்டத்தின்படி குற்றச்செயல் ஒன்றை இழைக்கக்கூடும் என்றோ, இழைக்கப்போவதாக அச்சுறுத்தியதாகவோ நம்புவதற்குக் காரணம் கொண்டிருந்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கத் தகுந்த காரணம் இருப்பதாகக் கருதுமிடத்து, அவர் அத்தகைய பகுதி எதனையும் வன்கொடுமைகள் நிகழக்கூடிய ஒரு பகுதி என விளம்புதல் செய்து, அமைதியையும் நன்னடத்தையையும் காத்து வருவதற்காகவும், பொது ஒழுங்கமைதியைப் பேணி வருவதற்காகவும் நடவடிக்கை எடுக்கலாம்; மேலும், தடுப்பு நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்ளலாம்.

சட்டம், ஒழுங்கு இயக்கமைப்பினால் எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள்.

(2) தொகுப்புச் சட்டத்தின் அத்தியாயங்கள் VIII, X, XI ஆகியவற்றின் வகையங்கள், உட்பிரிவு (1) இன் நோக்கங்களுக்காக இயலுமளவு பொருந்துறும்.

(3) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ளவர்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகளைத் தடுப்பதற்கும் அவர்களிடையே காப்புணர்வை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செயல் திட்டங்களை வகுத்து அந்தச் செயல் திட்டத்தில் அல்லது செயல் திட்டங்களில் குறித்துரைக்கப்படும் உரிய நடவடிக்கைகளை உட்பிரிவு (1) இல் சுட்டப்பட்டுள்ள அலுவலர்கள் எந்த முறையில் எடுக்க வேண்டும் என்பதைக் குறித்துரைக்கலாம்.

18. இந்தச் சட்டத்தின் கீழ்வரும் குற்றச்செயல் ஒன்றை இழைத்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் நபர் எவரும் கைது செய்யப்படும் நேர்வில் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 438இல் உள்ள எதுவும் பொருந்துறுவதில்லை.

இந்தச் சட்டத்தின் கீழ் வரும் குற்றச்செயல் ஒன்றை இழைக்கின்ற நபர்களுக்குத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 438 பொருந்துறுவ தில்லை.

19. தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 360இன் வகையங்களும் குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958 இன் வகையங்களும், இந்தச் சட்டத்தின் கீழ்வரும் குற்றச்செயல் ஒன்றை இழைத்தாகத் தீர்ப்புக்குள்ளான பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட நபர் எவருக்கும் பொருந்துறுவதில்லை.

இச்சட்டத்தின் கீழ் வரும் குற்றச் செயல் ஒன்றை இழைத்ததாகத் தீர்ப்புக் குள்ளான நபருக்குத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 360 இன் அல்லது குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் வகையங்கள் பொருந்துறுவ தில்லை.

20. இந்தச் சட்டத்தில் பிறவாறு வகைசெய்யப்பட்டவாறல்லாமல் நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது அத்தகைய சட்டம் ஒன்றின் பயன்திறன்வழி செல்திறன் கொண்டுள்ள முறையாவணம் எதிலும், அல்லது வழக்கம், வழக்காறு எதிலும் அல்லது இந்தச் சட்டத்தின் வகையத்திற்கு முரணாக எதுவும் இருந்தபோதிலும் இந்தச் சட்டத்தின் வகையங்களே செல்திறம் கொண்டவையாகும்.

பிற சட்டங்களை விட இந்தச் சட்டம் மேலோங்கி நிற்கும்.

21. (1) மைய அரசாங்கம் இதற்கென வகுக்கும் விதிகளுக்கு உட்பட்டு இந்தச் சட்டத்தைத் திறம்படச் செயற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மாநில அரசாங்கம் எடுக்கும்.

இந்தச் சட்டத்தைத் திறம்படச் செயற்படுத்து வதை உறுதி செய்ய அரசாங்கத் திற்குள்ள கடமை.

(2) மேலே கண்ட வகையங்களின் பொதுப் பாங்கிற்குக் குந்தகமின்றி இத்தகைய நடவடிக்கைகள் குறிப்பாகக் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கலாம்:—

(i) வன்கொடுமைகளுக்கு உள்ளானவர்கள் நீதிபெறுவதற்கு, சட்ட உதவி உள்ளடங்கலான போதிய வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்;

(ii) இந்தச் சட்டத்தின் கீழ்வரும் குற்றச்செயல்கள் புலனாய்வு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்படும்போது வன்கொடுமைகளுக்கு உள்ளானவர்கள் உள்ளடங்கலாக, சாட்சிகளுக்குப் பயணப்படியும் உணவுச் செலவுகளும் கொடுக்க ஏற்பாடு செய்தல்;

(iii) வன்கொடுமைகளுக்கு உள்ளானவர்களின் பொருளாதார, சமூக மறுவாழ்வுக்கு ஏற்பாடு செய்தல்;

(iv) இந்தச் சட்டத்தின் வகையங்களை மீறியதற்காகக் குற்ற வழக்குகளைத் தொடுப்பதற்கோ, அவற்றைக் கண்காணிப்பதற்கோ அலுவலர்களை அமர்த்துதல்;

(v) அத்தகைய செயல்முறைகளை வகுத்தமைப்பதில் அல்லது செயற்படுத்துவதில் மாநில அரசாங்கத்திற்கு உதவி புரிய அந்த அரசாங்கம் பொருத்தமெனத் தான் கருதும் உரிய நிலைகளில் குழுக்களை அமைத்தல்;

(vi) இந்தச் சட்டத்தின் வகையங்களை மேலும் திறம்படச் செயற்படுத்துவதற்கான செயல்முறைகளை எடுத்துக் கூறும் பொருட்டு இந்தச் சட்டத்தின் வகையங்களின் செயற்பாட்டினைப் பொறுத்து காலந்தோறும் ஆய்வு மேற்கொள்ள ஏற்பாடு செய்தல்;

(vii) பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியினராகவோ உள்ளவர்கள் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படக்கூடிய பகுதிகளைக் கண்டறிதல்; மேலும், அத்தகையோரின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான செயல்முறைகளை மேற்கொள்ளுதல்.

*(3)* மாநில அரசாங்கம் உட்பிரிவு *(1)*இன்படி மேற்கொள்ளும் செயல்முறைகள் இணைந்தியங்கத் தேவைப்படும் நடவடிக்கைகளை மைய அரசாங்கம் எடுக்கும்.

*(4)* மைய அரசாங்கம், இந்தச் சட்டத்தின் வகையங்களை ஒட்டித் தன்னாலும், மாநில அரசாங்கத்தாலும் மேற்கொள்ளப்படும் செயல்முறைகள் பற்றிய அறிக்கை ஒன்றை, ஒவ்வோர் ஆண்டும், நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் முன்பும் வைக்கும்.

நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

22. இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதப்பட்ட எதனைப் பொறுத்தும், மைய அரசாங்கத்திற்கு அல்லது ஒரு மாநில அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்க அலுவலர் எவருக்கும் அல்லது அதிகார அமைப்புக்கும் அல்லது பிற நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது.

விதிகள் வகுப்பதற்கான அதிகாரம்.

23. *(1)* இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக விதிகளை வகுக்கலாம்.

*(2)* இந்தச் சட்டத்தின்படி மைய அரசாங்கத்தால் வகுக்கப்பட்ட ஒவ்வொரு விதியும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அது ஒரு கூட்டத்தொடராகவோ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்கள் கொண்ட ஒரு கால அளவிற்கு அது அமர்வில் இருக்கையில் அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும் மேற்சொன்ன கூட்டத் தொடர்களை அல்லது அடுத்தடுத்த கூட்டத் தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும், அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.